

திருவள்ளூர் மத்திய மாவட்டம் – பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் அமைந்துள்ள கலைஞர் நூலகத்திற்கு – 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இருதய சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்ட மறைந்த டாக்டர் பி.வெங்கடேஸ்வரராவ் அவர்களின் குடும்பத்தினர் சார்பில் 1,000 புத்தகங்களை பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசரியிடம் வழங்கினர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் டி.முரளிகிருஷ்ணன் உள்பட பலர் உள்ளனர்.

தி.மு.க. மகளிர் அணி போராட்டம் – தறிகெட்டு ஓடும் த.வெ.க. அரசுக்கு எச்சரிக்கை மணி!

மக்களின் பாதிப்பினை உணர்ந்து ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 2 - தி.மு.க. மகளிரணி போராட்டம் தறிகெட்டு ஓடும் த.வெ.க. அரசுக்கு எச்சரிக்கை மணியாகும். மக்களின் பாதிப்பினை ஆட்சியாளர்கள் உணர்ந்து, உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 1.11.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளது. ஆட்சியின் நிர்வாகத்திறன் குறித்து பல் வேறு சர்ச்சைகள் எழுந்து வருகிறது. இது ஒருபுறமிருக்க தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவும் சட்டம் ஒழுங்கு பிரச்னை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள், வரலாறு காணாத விலைவாசி உயர்வு போன்றவை அனைத்து தரப்பு மக்களையும் பாதித்துள்ளது. அதிலும் குறிப்பாக பெரும்பாலும் பாதிக்கப்படுவோர் பெண்கள் தான்.

தவெக அரசின் இது போன்ற அவலங்களை கண்டித்து திமுக மகளிரணி சார்பில் மாநிலம் முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடக்கும் என்று அக்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதன்படி அனைத்து மாவட்டங்களிலும் நேற்று திமுக மகளிரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மகளிர் அணியின் போராட்டம் என்பது அரசுக்கு எதிர்ப்பை பதிவு செய்யும் வழக்கமான ஒரு நிகழ்வாகவே இருக்கும் என்று ஆட்சியாளர்களும், உளவுத்துறையினரும் கணக்கு போட்டு வைத்திருந்தனர்.

ஆனால் கணக்குகளை மீறி இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க அனைத்து


தினகரன்
நவம்பர் 1, 2026 ஞாயிற்றுக்கிழமை
எச்சரிக்கை மணி
தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளது. ஆட்சியின் நிர்வாகத்திறன் குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துவருகிறது. இது ஒருபுறமிருக்க தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலவும் சட்டம் ஒழுங்கு பிரச்னை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள், வரலாறு காணாத விலைவாசி உயர்வு போன்றவை அனைத்து தரப்பு மக்களையும் பாதித்துள்ளது. அதிலும் குறிப்பாக பெரும்பாலும் பாதிக்கப்படுவோர் பெண்கள் தான். தவெக அரசின் இது போன்ற அவலங்களை கண்டித்து திமுக மகளிரணி சார்பில் மாநிலம் முழுவதும் மாபெரும்

இடங்களிலும் ஆயிரக்கணக்கான மகளிர் ஆர்ப்பரித்து திரண்டனர். அவர்கள் உணர்ச்சி பிழம்பாக மாறி சட்டம் ஒழுங்கு பிரச்னை, பெண்கள்குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறைபாடுகள், விண்ணை முட்டிய விலைவாசி உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து எழுச்சியுடன் கோஷமிட்டது பேசுபொருளானது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சட்டம்ஒழுங்கு சீர்கேடு குறித்து மாநிலம் முழுவதும் கோஷங்கள் ஒலித்துக் கொண்டிருந்த நேரத்தில், கோவை சிறையில் இருந்து கைதி தப்பியோட்டம் என்று பரவிய தகவல், தவெக அரசின் மெத்தன ஆட்சிக்கு கண நேர சாட்சியாக மாறிப் போனது.

இதை மக்கள் மன்றத்தில் சுட்டிக்காட்டிய மகளிர், மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான குற்றங்கள் தொடர்ந்து அரங்கேறி வருவதையும் பட்டியலிட்டு அதிரவைத்தனர். குறிப்பாக பெண்களுக்கு எதிரான கொலை, கொள்ளை, பாலியல் சார்ந்த குற்றங்களை அவர்கள் பட்டியலிட்டது, பார்வையாளர்களாக நின்றி ருந்த மகளிரையும் பதறவைத்தது. அதேபோல் தமிழகத்தில் தற்போது தலைவிரித்தாடும் மற்றொரு பெரும் அவலமாக இருப்பது விலைவாசி உயர்வு.

அரிசி, பருப்பு, எண்ணெய், மளிகை பொருட்கள் என்று அனைத்தின் விலையும் வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. இதில் பாதிக்கப்படுவோர் 95 சதவீதம் மகளிர்தான். பண்டிகை காலத்தில் நிலவும் இந்த விலைவாசி உயர்வு பெரும் சுமையாக மாறியுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், இதை கண்டித்து கோஷமிட்டபோது அவர்களின் வேதனை முழுமையாக வெளிப்பட்டது.

சிப்பாய்களாக கட்சியின் அனைத்து அணி நிர்வாகிகளும் சூழ்ந்திருந்த போதும், தன்னெழுச்சியாக ஆர்ப்பாட்டத்தை மகளிரணியினர் நடத்தினர். நூதன முறையில் பல்வேறு அவலங்களை எடுத்துரைத்து மக்கள் படும் வேதனையை அரசுக்கு உணர்த்தினர். இது கட்சி பாகுபாடின்றி அனைத்து தரப்பு பொதுமக்களின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்த அறிவிப்பை வெளியிட்ட திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் 'மகளிரணியின் போராட்டம் தறிகெட்டு ஓடும் தவெக அரசுக்கு எச்சரிக்கை மணியாக அமையும்' என்று குறிப்பிட்டி ருந்தார்.

அதை நூறு சதவீதம் மெய்ப்பிக்கும் வகையில் நேற்றைய மகளிரணியின் அறிவார்ந்த எழுச்சி போராட்டம் அமைந்தது என்பது நிதர்சனமான உண்மை. இதை உணர்ந்து ஆட்சியாளர்கள் செயல்படுவதே மக்களுக்கு செய்யும் நன்மை என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், நவ. 2 - கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (02.11.2026 - திங்கட்கிழமை) மாலை 3.00 மணியளவில், காட்டுமன்னார் கோவில், எம்.ஆர்.கே. கூட்ட அரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் திரு.இள.புகழேந்தி ExMLA., அவர்கள் தலை



மையிலும், தலைமைக் கழக பிரதிநிதி கள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி MP., மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி MC, ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கடலூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக மறுசீரமைப்பு, எதிர்க்கட்சித் தலைவர் பிறந்தநாள், கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

'சொல் புதிது' திட்டத்தின் 18வது கூட்டம்!

முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 2 - தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் "சொல் புதிது" திட்டத்தின் பதினெட்டாவது கூட்டம், தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் சா. சரவணன், ஒப்பிலா மதிவாணன், மு.இராம சுவாமி, பாரதிபாலன், ம. இளங்கோவன், சிவமுருகேசன், விசயலட்சுமி இராமசாமி, பூ. சேகர், ஊடக வியலாளர் திரு. ராஜ்கண்ணன், திரு நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். பின்வரும் 41 சொற்கள் இறுதி செய்யப் பட்டன.

வ. எண் பிற மொழிச் சொல் - தமிழ்ச் சொல் வருமாறு:

1 *Fecal sludge* - மலக்கசடு
2 *CMDA approval* - சென்னைப் பெருநகர வளர்ச்சி ஆணைய ஒப்புதல்
3 *DTCP approval* - நகர் ஊரமைப்புத் திட்ட இயக்கக ஒப்புதல்
4 *RERA approval* - நிலவணிக ஒழுங்குமுறை ஆணைய ஒப்புதல்
5 *Black ticket* - கள்ள அனுமதிச்சீட்டு
6 *Lip smacking feasts* - நற்சுவை விருந்து
7 *Lip smacking savouries* - நற்சுவைக் காரத்தீனிகள்
8 *Lip smacking recipes* - நற்சுவைச் சமையல் குறிப்புகள்
9 *Offroading* - கரடு முரடு வழிப் பயணம்
10 *Offroad racing* கரடுமுரடு வழிப் பந்தயம்
11 *Tuition centre* - தனிப்பயிற்சி மையம்
12 *Water service* - நீர் வழங்கல் /நீரால் கழுவுதல்
13 *Seabin* - கடல் குப்பைத் தொட்டி
14 *Synbiotics* இணை நண்ணுயிரிகள்
15 *Postbiotics* - பின்விளை நண்ணுயிரிகள்
16 *Trashboom* - மிதவைக் குப்பை வேலி
17 *Photobioreactor* - ஒளியுயிரி வினைக்கலன்
18 *Synthetic intelligence* - இணைவுச் செய்யறிவு
19 *Divider cone* - பிரிப்புக் கூம்பு
20 *Freestyle wrestling* - நெறியிலா மற்போர் /கட்டற்ற மற்போர்
21 *Recurve archery* - பின்வளைவு வில்வித்தை
22 *Car chasing* - ஊர்த்துரத்தல்
23 *Corrugated box* - அலை அட்டைப் பெட்டி
24 *Zipline* - கம்பிச் சறுக்கு
25 *Rope cycling* - வடம் மிதிச் சுற்று
26 *Rocket ejector* - ஏவூர்தி வெளியேற்றி
27 *Human gyroscope* - மனிதச் சுழற்பொறி
28 *Optogenetics* - ஒளிமரபியல்
29 *Chemogenetics* - வேதிமரபியல்
30 *Paragliding* - வான்குடைச் சறுக்கு
31 *Channel head* - ஊடகத் தலைமை
32 *News anchor* - செய்தித் தொகுப்பாளர்
33 *Dumbbells* - கையெடைகள்
34 *Kettlebells*- கைப்பிடி எடைகள்
35 *Itinerary* - பயண நிரல்
36 *Phrasebook* - மொழி வழக்கக் கையேடு
37 *Glass lifter* - கண்ணாடித் தூக்கி
38 *Portmanteau* - சொற் கூட்டு
39 *Vistadome coach* - காட்சிக் கூரைப்பெட்டி
40 *Double Decker coach* - இருதளத் தொடர்வண்டிப் பெட்டி
41 *Land divider* - தடம் பிரிப்பான் ஆகிய சொற்கள் இறுதி செய்யப்பட்டன.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியக் கழகப் பொருளாளர் வி.சரவணன் சகோதரர் மறைந்த வி.முரளியின் உடலுக்கு, மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ., சி.எச்.சேகர், மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ந.பரிமளம், கி.வேணு ஆனந்த், மு.முரளிதரன், நிர்வாகிகள் மு.பாஸ்கரன், எஸ்.முத்துக்குமார், பா.து.தமிழரசன், கோகுல்நாத், ஆர்.எஸ்.காலாத்தி, ராமஜெயம், ஜெயச்சந்திரன், மங்கலம் சுரேஷ், வெங்கடேசன், ஜோதி,குமார், விக்கி சரத்குமார், லோகேஷ், கவிமொழி, சங்கர் அருள், கோபி, சரவணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; எங்க த.வெ.க. ஆட்சியில் லஞ்சம் என்பது சுத்தமா இல்ல பாத்தீங்களா, அப்படின்னு காட்டு கத்தல் கத்துறாங்களே, அது உண்மையா இருக்குமா?

பட்டணம் : ஆமாமய்யா; காட்டு கத்தல்தான் கத்துறாங்க. ஆனா நெஜம் என்ன தெரியுமா? இப்பக் கூட லாரி உரிமையாளர்கள் சங்கம் மூணு நாள் ஸ்ட்ரைக் அறிவிச்சிருக்காங்க. எதுக்குத் தெரியுமா? எங்க கிட்ட போக்குவரத்து துறை, காவல் துறை, கனிம வளத்துறை இவர்களெல்லாம் மாதாந்திர அளவில் கணக்கிட்டு லஞ்சம் கேட்டு தொல்லை பண்றாங்க. எங்களால சமாளிக்க முடியாமத்தான் முதலமைச்சர் கவனத்தை ஈர்க்கணும்னு இந்த மூணு நாள் ஸ்ட்ரைக். அப்படிங்கறாங்க. இப்ப என்ன சொல்லப் போறாங்க. இது தான் லஞ்சம் இல்லாத ஆட்சியா?

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(31.10.2026)



1. அரியலூர் அருகே மது அருந்துவதை தட்டி கேட்டதால் ஊர்க் காவல் படை வீரர் அடித்துக் கொலை .

2. சிவகங்கை அருகே பாகனேரி புதுவளவில் டீக்கடை வாசலில் படுத்திருந்த மூதாட்டியின் தலையில் பாறாங்கல்லை போட்டு தலையை நசுக்கி படுகொலை .

3. கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே மீதிகுடி என்ற ஊரில் குடிபோதையில் மனைவியை அடித்துக்கொன்று நள்ளிரவில் சுடுகாட்டில் எரித்த கணவன் ....

4. திண்டுக்கல் மாவட்டம் இரண்டலைப்பாறையில் மனைவியை கொலை செய்து பாலத்தின் அடியில் புதைத்ததாக கூறிய கணவன், பிணத்தை காணாததால் பரபரப்பு .



5. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே தர்ம தோப்பு பகுதியில் 70 வயது மூதாட்டியை பாலியல் தொந்தரவு கொடுத்து அடித்துக் கொலை செய்த வாலிபர் சிக்கினான்...

6. சென்னை புளியந்தோப்பு பகுதியில் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவர் சிக்கினார்.

7. சென்னை எம்ஜிஆர் நகர், பாரதியார் தெருவில் கட்டுமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வட மாநில பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ரௌடி சிக்கினான்.

8. விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே காதல் திருமணம் செய்த இளம் பெண் காரில் கடத்தல், பரபரப்பு .

9. கோவை மாவட்டம் காந்திபுரத்தில் உள்ள மத்திய சிறையில் இருந்து போலீசாரை தள்ளிவிட்டு கைதி தப்பி ஓட்டம், தொடர் கதையாகும் கைதிகள் தப்பியோடிய நிகழ்வு.

10. சென்னை அடுத்து ஆதம்பாக்கம் அருகே கடை வியாபாரிகளிடம் கத்தி முனை யில் மிரட்டி மாமூல் வசூலித்த ரவுடி சிக்கினான் .



11. சென்னை திருவல்லிக்கேணி பல்லவன் சாலை அருகே முன் விரோதம் காரணமாக வேலைக்குச் சென்று திரும்பிய பிளம்பர் மீது பீர் பாட்டிலால் தாக்கி உருட்டு கட்டையால் அடித்த, ஐந்து வாலிபர்கள் தப்பி ஓட்டம் .

12. ஆவடியை அடுத்த மோரை பகுதியில் தனியார் பள்ளி காவலாளியை வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டி பணம் மற்றும் செல்போன் பறிப்பு .

13. சென்னை அசோக் நகரில் போக்குவரத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ்காரர் மீது தாக்குதல் நடத்திய வாலிபர்கள் .

14. நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் நகை திருட்டு வழக்கில் சிக்கிய குற்றவாளிகளுக்கு போலி ஆவணம் வழங்கி ஜாமீன் பெற்ற புகாரில் த.வெ.க. வை சேர்ந்த அரசு வழக்கறிஞர் சிக்கினார் .



15. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் துணை ஜனாதிபதி வந்த போது மின்தடை ஏற்பட்ட விவகாரம், அவர் கிளம்பிட்டார்னு நினைச்சு சுவிட்ச் ஆப் பண்ணிட்டாங்க , அமைச்சர் நிர்மல் குமார் புது விளக்கம் .

16. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கிளை சிறை மூடப்பட்டது . பல்வேறு சிறைகளில் கைது தப்பி ஓட்டம் காரணமாக, போதிய பாதுகாப்பு இல்லாததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை .

17. சேலம் மாவட்டம் கிச்சிலிபாளையம் அருகே கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்ட ஆயுள் தண்டனை கைதியுடன் போஸ் கொடுத்து ரிலீஸ் எடுத்து வெளியிட்ட அவரது ஆதரவாளர்கள் .

18. வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே கள்ளூர் பகுதியில் தாராள கள்ள நோட்டு புழக்கம் – ரூ.ஒன்றரை லட்சம் கள்ள நோட்டு சிக்கியது .